"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,055,86,60,000/—, மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,400,54,09,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–5–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

141. மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

142. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2009–2010. (தமிழ், ஆங்கிலம்)

143. கால்நடை பராமரிப்புத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)

144. மீன் வளத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் (2006–2007 முதல் 2009–2010 வரை) குறித்த சிறு நூல். (தமிழ்)

145. பால் வளத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)